2. அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவலில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 1 "வினாக்கள்—விடைகள்" மற்றும் இனம் 2 "அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவன ஈர்ப்பு" ஆகியவற்றை ஒத்திவைத்து, இனம் 3—1987-88 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் மட்டும் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்பு.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவையில் (Senate) ஏற்பட்டுள்ள மூன்று வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

இம்மூன்று வெற்றிடங்களுக்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களிடமிருந்து வேட்புத் தாள்கள் வரப்பெற்று, அனுமதிக்கப் பெற்றுள்ளன :—

1. திரு. சா. ஞானசுந்தரம்
2. திரு. துரை அன்பரசன்
3. திரு. சு. சிவராஜ்
4. டாக்டர் ந. மாசிலாமணி
5. திரு. எஸ். ஜெயச்சந்திரன்

[பேரவைத் தலைவர்]

எனவே, இவ்வைந்து வேட்பாளர்களிலிருந்து மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு 5—5—1987 செவ்வாய்க் கிழமை காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை, முன்னாள் சட்டமன்ற மேலவை மண்டப கிழக்கு வளாகத்தில், பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்கின் மூலம் தேர்தல் நடைபெறும்.

4. வரவு-செலவுத் திட்டம், 1987—88, வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்துசமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,48,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, நத்தம் கோவில்பட்டியில் உள்ள புராதன ஆலயமான அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்தில் திருப்பணி செய்ய திருப்பணிக் குழு ஒன்று அரசுத் துறை ஆணை செ.மு.நக. 1496/82-83, நாள் 17—10—1981-ன் படி அமைக்கப்பட்டும் இதுவரை 15 ஆண்டுகளாக திருப்பணி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,48,63,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரிலுள்ள ராஜு வாய்க்காலை பொது மக்கள் நலனுக்காக ரோடு போடுவதைத் தடுத்து ரோட்டிற்குரிய